திரு. அ. ராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகக் காடுகளில், குறிப்பாக குமரி மாவட்ட வனப் பகுதிகளில் கோடிக்கணக்கான மரங்கள் காற்றிலும், மழையிலும் விழுந்து கிடக்கின்றன. தொடர்ந்து பல ஆண்டுகளாக அவை அங்கேயே கிடப்பதால் மரங்கள் நாசமாகிக் கொண்டிருக்கின்றன. அரசு இதில் தனிக் கவனம் செலுத்தி, அந்த மரங்களை வன மண்டியில் கொண்டு வந்து ஏலம் விட்டு, பொது மக்களுக்குக் கொடுக்க முன்வருமா என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கேள்வி இரப்பர் பற்றியது. (குறுக்கீடு) நீங்கள், வெட்டிய மரத்தைப் பற்றிக் கேட்டுக் கொண்டிருக்கிறீர்கள். மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. என். செல்வராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டம் முழுவதும் சரணாலயப் பகுதியாக அறிவிக்கப்பட்டிருந்தது. சரணாலயப் பகுதிகளில் மரங்கள் வெட்டவோ அல்லது காற்றில் விழுந்த மரங்களை அங்கிருந்து அப்புறப்படுத்தவோ கூடாது என்பது விதி. எனவே, அந்த வகையிலே காற்றிலே விழுந்த மரமென்றாலும் அந்தப் பகுதியிலிருந்து எடுக்க முடியாது. அதே நிலையிலே இருந்து அவை அழிந்தாலும், மரங்களுக்கு உரமாக மாறுமென்கின்ற காரணத்தால், இதுவரை அவற்றை அகற்றுகின்ற எண்ணம் அரசுக்கு இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 149, மாண்புமிகு உறுப்பினர் திரு. விடியல் எஸ். சேகர், மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் அவர்கள்.

149—

கட்டடம்

***107890—திரு. விடியல் எஸ். சேகர்:**

மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னிமலை ஒன்றியத்தில் வாய்ப்பாடி புதூர் சத்துணவுக் கூடத்திற்கு கட்டடம் கட்டித் தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2010 மே 6]

மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன், சமூக நலத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) சென்னிமலை ஊராட்சி ஒன்றியம், வாய்ப்பாடி புதூர் பள்ளியில் சத்துணவு சமையல் செய்யப்படும் கட்டடம் நல்ல நிலையில் உள்ளது. இதில் மேற்கூரை, அடித்தளம் ஆகியவற்றில் மட்டும் சிறிய அளவில் பழுதுபார்க்க ரூ.10,000/- ஒப்பளிப்பு செய்யப்பட்டு, பழுதுபார்க்கும் பணி துவக்கப்பட்டுள்ளது. இப்பள்ளியில் குறைவான மாணவர்களே இருப்பதால் புதிய கட்டடம் கட்ட வாய்ப்பு இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. விடியல் எஸ். சேகர்.

(முற்பகல் 10-25

திரு. விடியல் எஸ். சேகர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பக்கத்தில் இருக்கின்ற வாய்ப்பாடி என்கின்ற இடத்திலுள்ள பள்ளியிலே 120 குழந்தைகள் படிக்கின்றார்கள். அங்கேயாவது புதிய கட்டடம் கட்டித் தரப்படுமா என்பதைத் தங்கள் வாயிலாகக் கேட்பதோடு. . . (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. விடியல் சேகர்தான் கேள்வி கேட்கிறார். பக்கத்தில் இருந்துகொண்டு நீங்கள் என்ன கேட்கிறீர்கள்?

திரு. விடியல் எஸ். சேகர்: தமிழகம் முழுவதும் இருக்கின்ற சத்துணவுக் கூடங்களிலே குழந்தைகளுக்கு எவர்சில்வர் தட்டு வழங்கப்படும் என்று சொன்னீர்கள், குக்கர் இலவசமாக வழங்கப்படும் என்று சொன்னீர்கள், இலவச எரிவாயு இணைப்பு வழங்கப்பட்டு, ஆரோக்கியமான சமையல் செய்து குழந்தைகளுக்கு வழங்கப்படும் என்று சொன்னீர்கள். அதுபோன்று தமிழகத்திலே வழங்குகின்ற திட்டம் இருக்கின்றதா? அது எப்போது வழங்கப்படும் என்பதைத் தங்கள் வாயிலாகக் கேட்டு, அமர்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் தலைவர் கலைஞர் அவர்கள் 9,045 சத்துணவு மையங்கள்

கட்டுவதற்கு 200 கோடி ரூபாய் நிதியொதுக்கீடு செய்துள்ளார்கள். அது நிதிநிலை அறிக்கையிலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆகவே, உறுப்பினர் கோரியுள்ள அந்தக் கட்டடம் கட்டுவதற்கு நிதியொதுக்கீடு செய்யப்பட்டுள்ளது என்பதைக் கூறிக்கொள்ள விரும்புகிறேன். அதேபோல, சமையலறைக் கூடங்களை நவீனப்படுத்தும் வகையில் எரிவாயு இணைப்பு வழங்குதல், குக்கர் வழங்குதல் மற்றும் அந்தக் கட்டடம் மேல்தளம் அமைத்தல் ஆகிய பணிகள் செய்து இதுவரை 2,785 சமையலறைக் கூடங்கள் நவீனப்படுத்தப்பட்டுள்ளன. அதேபோல, இந்த ஆண்டும் சுமார் 950 சத்துணவு மையங்களை நவீனப்படுத்துவதற்கு நிதியொதுக்கீடு செய்யப்பட்டுள்ளது என்பதைக் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

அதேபோல, சத்துணவு மையக் குழந்தைகளுக்கான தட்டு, டமளர் இதுவரை 3 இலட்சம் குழந்தைகளுக்கு அரசின் சார்பில் வழங்கப்பட்டுள்ளன. அதுமட்டுமல்லாமல், தொண்டு நிறுவனங்கள், நன்கொடையாளர்கள் ஆகியோரும் தட்டு, டம்ளர் வாங்கிக் கொடுத்து வருகிறார்கள். ஆகவே, இந்த ஆண்டு இதுவரை வழங்கப்படாத, தேவையுள்ள அனைத்து மாணவர்களுக்கும் தட்டு, டம்ளர் வழங்க அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. விடியல் எஸ். சேகர்.

திரு. விடியல் எஸ். சேகர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சத்துணவுக் கூடங்கள் கட்டுவதற்கு சட்டமன்ற உறுப்பினர் நிதியிலிருந்து கட்டாயமாக 20 இலட்சம் ரூபாய் கொடுக்கவேண்டுமென்ற சூழ்நிலை இருக்கின்ற காரணத்தாலே, மற்ற பணிகளுக்கு அந்தத் தொகை போதுமானதாக இல்லை. எனவே, அந்த 20 இலட்சம் ரூபாயைக் கூடுதலாக சேர்த்து, இந்த ஆண்டு சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியை 2 கோடி ரூபாயாக வழங்குவதற்கு மாண்புமிகு துணை முதல்வர் அவர்கள் அனுமதி அளிப்பாரா என்பதைத் தங்கள் வாயிலாகக் கேட்டு, அமர்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இது அந்தத் துறை அமைச்சர் சொல்லக்கூடிய பதில் இல்லை.

வினா வரிசை எண் 150, மாண்புமிகு உறுப்பினர் திரு. மு.க. பெரியசாமி, மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் அவர்கள்.